# 232 பாரதியின் மொழிப்பற்றும் நாட்டுப்பற்றும்

முனைவர் ம. கீதா
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் உயர்கல்வி நிறுவனம்
கோயம்புத்தூர் - 641 043.

இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற கவிஞராகத் திகழ்ந்தவர் மகாகவி பாரதியார். இவர் நாட்டுப்பற்றையும், மொழிப்பற்றையும் தம் இரு கண்களாகக் கொண்டவர். மக்களின் உள்ளத்தில் விடுதலை வேட்கையைத் தம் கவிதைகளின் மூலம் முதன்முதலில் ஏற்படுத்தியவர். பாட்டுக்கொரு புலவனாய் நாட்டு மக்களின் நெஞ்சங்களில் இன்றளவும் நன்கு வாழ்ந்து கொண்டிருப்பவர். பண்டிதர்களிடம் மட்டும் இருந்த அருந்தமிழை, தமிழ்க்கவிதைகளைப் பாமரனும் புரிந்து கொள்ளும் வகையில் எளிமையாகப் பாடியவர். மக்கள் சமுதாயத்தை நேசித்துப் பாடிய இவர்தம் மூச்சும், பேச்சும், வாழ்க்கையும் தமிழுக்கு என்று அர்ப்பணித்தவர். இத்தகைய புகழ்பெற்ற பாரதியின் தமிழ் மொழிப்பற்றையும், நாட்டுப்பற்றையும் பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம் ஆகும்.

## தமிழ்மொழியோடு கூடிய நாட்டுப்பற்று

பாரதியார் தமது வாழ்க்கையின் குறிக்கோளைத் திட்டவட்டமாகவும், தெளிவாகவும், திட்பமாகவும், துணிவாகவும் குறிப்பிடும்போது நமக்குத் தொழில் கவிதை, நாட்டிற்கு உழைத்தல், இமைப்பொழுதும் சோராதிருத்தல் என்று அழகுபடக் கூறுகின்றார். இவரது சொல், செயல், எண்ணம், எழுத்து எல்லாமே கவிதையாக இருந்தன. தமிழ்மீது மிகுந்த பற்றுக் கொண்டிருந்தார். தமிழ்மொழி அளப்பதற்கரிய அறிவூட்டும் மொழி என்றும், அளவிலா ஆற்றல் தரும்மொழி என்றும் வானம் அளந்தவை அனைத்தையும் அறிந்தமொழி என்றும் பாரதியார் பாராட்டிப் புகழ்கின்றார். அத்தகைய அறிவுத் திறனையும், ஆற்றல் திறனையும் கொண்ட தமிழைத் தம் தாய்மொழியாகக் கொண்டு, தமிழர் என்ற பெயரையும் பெற்று வாழ்ந்து கொண்டிருந்த போதிலும் தமிழ் மக்கள் பாமரராய், விலங்குகளாய்ப் பிறர் இகழ்ந்து பேச வாழ்ந்து கொண்டிருக்கிறார்களே என்பதை எண்ணி மனம் வருந்துகிறார். இதை,

*'நெஞ்சு பொறுக்கு திலையே - இந்த*
*நிலை கெட்ட மனிதரை நினைந்து விட்டால்*
*அஞ்சி அஞ்சிச் சாவார் - இவர்*
*அஞ்சாத பொருளில்லை அவனியிலே!*
*எண்ணிலா நோயுடையார் - அவர்*
*எழுந்து நடப்பதற்கும் வலிமையிலார்*
*கண்ணிலாக் குழந்தைகள் போல் - பிறர்*
*காட்டிய வழியிற் சென்று மாட்டிக் கொள்வார்*
*நண்ணிய பெருங்கலைகள் - பத்து*



*நாலாயிரம் கோடி நயந்து நின்ற*
*புண்ணிய நாட்டினிலே - இவர்*
*பொறியற்ற விலங்குகள் போல வாழ்வார்'*

என்று சொல்லிச் சொல்லி பாரதியார் நெஞ்சம் பதைத்தார்.

தமிழ்மொழியின் பெருமையினையும், தமிழ்நாட்டின் வரலாற்றுத் தொன்மையினையும், தமிழ்ச்சாதியின் பண்பாட்டுச் சிறப்பினையும் உலகிற்கு எடுத்து விளக்கும் முயற்சியில் அடிஎடுத்துக் கொடுத்தவர் பாரதி.

*'சொல்லில் மொழிகளில் தமிழ் மொழிபோல்*
*இனிதாவது எங்கும் காணோம்'*

என்று குழந்தைகளுக்கு அறிவுறுத்திக் கூறுகிறார்.

*'யாமறிந்த மொழிகளில் தமிழ் மொழிபோல்*
*இனிதாவது எங்கும் காணோம்'*

என்று தமிழ்மொழியின் சிறப்பினைப் பெரியவர்களுக்கு அறுதியிட்டுக் கூறுவதோடு மட்டுமல்லாமல்,

*'சேமமுற வேண்டுமெனில் தெருவெல்லாம்*
*தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வீர்'*

என்று வேண்டுகோளையும் விடுக்கின்றார்.

தமிழ்மொழியின் சிறப்பை மட்டும் பாடாமல் தமிழ் இலக்கியம் படைத்த புலவர்களையும்.

*'யாமறிந்த புலவரிலே கம்பனைப் போல்*
*வள்ளுவர் போல், இளங்கோ வைப்போல்*
*பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை*
*உண்மை, வெறும் புகழ்ச்சி இல்லை'*

என்ற பாடலின் மூலம் தமிழ்ப் புலவர்களைப் போல் உலகத்தில் எங்கும் பிறந்ததில்லை என்று கூறி பெருமிதம் கொள்கிறார்.

*'தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம்*
*பரவும் வகை செய்தல் வேண்டும்'*

என்று கூறியதோடு நில்லாமல், தமிழில் உள்ள நிறைகளை மட்டும் கூறாமல், அதன் குறைகளையும் சுட்டிக்காட்டி அதனைத் திருத்தக்கூடிய வழிமுறைகளையும் கூறினார். பல்வேறு துறைகள் தமிழில் தோன்றாத நிலைகண்டு வருந்திய பாரதி இனிச் செய்யவேண்டிய பணிகளாக,

*'பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்*
*தமிழ் மொழியில் பெயர்த்தல் வேண்டும்'* என்றும்

*'இறவாத புகழுடைய புதுநூல்கள் தமிழ்மொழியில்*
*இயற்றல் வேண்டும்'* என்றும்

மக்களுக்குக் கட்டளையிடுகின்றார்.

'மெல்லத் தமிழினிச் சாகும்' என்ற கூற்றினைக் கேட்டுக் கொதித்தெழுந்த பாரதி,

'சென்றிடுவீர் எட்டுத் திக்கும் கலைச்
செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்குச் சேர்பீர்'

என்று தமிழ் மக்கள் ஒவ்வொருவருக்கும் ஆணையிடுகின்றார். அறிவியல், விஞ்ஞான வளர்ச்சியின் வாயிலாகத்தான் ஒரு நாடு வலிமைபெற்று வளர்ச்சியடைய முடியும் என்பதை நன்குணர்ந்த பாரதி, அத்தகைய முயற்சியில் நாடு ஈடுபட வேண்டிய அவசியத்தையும் வலியுறுத்துகின்றார்.

தமிழ் மீது தணியாக் காதல் கொண்ட பாரதி மொழியையும் நாட்டையும் இரு கண்களாகக் கொண்டதோடு மட்டுமல்லாமல் தாயாகவே கருதிப்பாடுகின்றார் இதனை.

'முப்பது கோடி முகமுடை யாள் உயிர்
மொய்ப்புற வொன் றுடையாள் - இவள்
செப்பு மொழிபதி னெட்டுடை யாள், எனிற்
சிந்தனை ஒன்றுடையாள்'

என்ற பாடல் வரிகளின் மூலம் மதத்தாலும், குலத்தாலும், மொழியாலும் வேறுபட்டு நின்றாலும் இத்தனை ஒன்றுடையவர்கள் தமிழர்கள் என்று ஒற்றுமையை விரும்பும் பாரதியின் எண்ணத்தை நலம் அறிந்து கொள்ள முடிகிறது.

பாரதி தன் தாய்மொழி மீதும், தாய்நாட்டின் மீதும் மிகுந்த பற்றுடையவராகத் திகழ்ந்தார். எல்லை கடந்த நாட்டுப்பற்று என்று கூடச் சொல்லலாம். தமிழ்நாடு மட்டும் தம் உடைமை என்று கருதாமல் பாரததேசமே எங்கள் தேசம் என்று தோள் கொட்டுவோம் என்று பாடுவதிலிருந்து அவருடைய விரிந்த தேசியப் பார்வை புலப்படுகிறது. மேலும்,

'மன்னும் இமய மலையெங்கள் மலையே
மாநில மீதிது போற்பிறி திலையே
இன்னறு நீர்க் கங்கை யாறெங்கள் யாறே
இங்கிதன் மாண்பிற் கெதிரெது வேறே?
பன்னரும் உபநிடத நூலெங்கள் நூலே
பார்மிசை யேதொரு நூல் இது போலே!
பொன்னொளிர் பாரத நாடெங்கள் நாடே
போற்றுவம் இஃதை எமக்கிலை ஈடே'

என்று பாடுவதன் வாயிலாக பாரததேசத்தின் மீது அவருக்கிருந்த பற்று நன்கு புலப்படுகின்றது.

விடுதலை வேட்கை தீவிரமாக இவர் மனதில் வேரூன்றி இருந்தது. கொடுமை கண்ட போதெல்லாம் கொதித்தெழுந்து பாடல்களைப் பாடினார்.

'பறைய ருக்கும் இங்கு தீயர்
புலைய ருக்கும் விடுதலை
பரவ ரோடு குறவ ருக்கும்
மறவ ருக்கும் விடுதலை
ஏழை யென்றும் அடிமை யென்றும்
எவரும் இல்லை ஜாதியில்
இழிவு கொண்ட மனித ரென்பது
இந்தியாவில் இல்லையே'



என்று ஏற்றத் தாழ்வுகள் இல்லாத ஒரு இந்தியாவைக் காண அவர் மனம் விரும்பியது. மனிதரை மனிதர் உயர்வு தாழ்வெனச் சொல்லி நோகச் செய்வதைப் பாரதியால் சகிக்க முடியவில்லை.

'மனிதர் நோக மனிதர் பார்க்கும்
வாழ்க்கை இனியுண்டோ? - என்றும்
'மனித உணர்வை மனிதர் பறிக்கும்
வழக்கம் இனி உண்டோ? - என்றும்
'கஞ்சி குடிப்பதற்கில்லார் - அதன்
காரணங்கள் இவையென்றும் அறிவுமிலார்'

என்று வருந்துகின்ற பாரதி,

'வயிற்றுக்கு சோறிட வேண்டும்
இங்கு வாழும் மனிதர்க்கெல்லாம்'

என வேண்டுகோள் விடுத்து, ஏழைகளிடம் காணப்படும் குறைகளை நிவர்த்திச் செய்தால் அவனும் மேன்மையானவனாக ஆக்கப்படுவான் என்பதை தம் கவிதைகளின் வாயிலாக மக்களுக்குப் புலப்படுத்துகின்றார்.

மனிதர் ஒவ்வொருவருக்கும் ஒரு குறிக்கோள் அல்லது கொள்கைவேண்டும். கொள்கை இல்லாத மனிதன் உயிர் இல்லாத உடலுக்கு ஒப்பாவான். பாரதி வாழ்ந்த காலத்தில் வாழ்ந்த மக்களின் குறிக்கோள் விடுதலை. அந்த விடுதலையையும், சுதந்திர தாகத்தையும் முதன்முதலில் மக்களிடத்தில் ஏற்படுத்திய பெருமைக்குரியவர்.

தன்னையும், தன் வாழ்க்கையையும் தமிழுக்காகவும், தமிழ் நாட்டுக்காகவும் அர்ப்பணித்த மகாகவி காலத்தால் அழியாத கவிதைகளைப் படைத்து மக்களுக்கு எழுச்சியையும் உணர்ச்சியையும் ஊட்டியவர். அவர் கவிதை உள்ளளவும் அவரின் புகழ் நிலைத்திருக்கும் என்பது திண்ணம்.